கங்கள்: ஆறு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 10.00

www.uthayan.com

டர் 22 வள்ளுவர் ஆண்டு 2037 மார்கழி 17 திங்கட்கிழமை (01.01.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 37

### இராஜதந்திர நடவடிக்கையில் அமைச்சர் செவுல்

# அமைதிப் பேச்சை மீளத் தொடங்குமாறு

# அரசுக்கு ஜேர்மனி அழுத்தம் கொடுக்கும்

## புலிகள் மீதான தடையை நீக்கவும் செல்வாக்குச் செலுத்தக் கூடுமாம்

கொழும்பு,ஜனவரி 1

தடைப்பட்டிருக்கும் அமைதிப் பேச்சுக்களை மீண்டும் தொடங்குமாறு அரசாங்கத்துக்கு ஜேர்மனி அழுத்தம் கொடுக்க உள்ளதாக அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

இதற்கான இராஜதந்திர நடவடிக்கைகளில் ஜேர்மனியின் பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் அபிவிருத்தி அமைச்சர் ஹைடி மரியா ங்சோரெஜ் செவுல் இப்போது ஈடுபட்டிருக்கிறார் என்றும் தகவல் வெளியாகியுள்ளன.

இருபத்தைந்து நாடுகள் அங்கம் வகிக்கும் ஐரோப்பிய ஒன்றியத்தின் தலைமைப் பதவியை இன்று ஜனவரி முதலாம் திகதியிலிருந்து ஜேர்மனி ஏற்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

இதற்கிடையில் தமிழீழ விடுதலைப் புலிகள் மீது ஐரோப்பிய ஒன்றியம் விதித்த தடையை நீக்குவதற்கும் ஜேர்மனி செல்வாக்குச் செலுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கையில் இடம்பெற்று வருகின்ற வன்முறை நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டு அமைதிப் பேச்சு தொடங்கப்படும் வரை இலங்கையின் அபிவிருத்திப் பணிகளுக்காக நிதியுதவிகளை வழங்காது அவற்றை நிறுத்திவைக்க வேண்டும் என்று கடந்த ஒக்ரோபர் மாதத்தில் ஜேர்மனி முடிவுசெய்திருந்தது தெரிந்ததே. அதன் தொடர் இராஜதந்திர நடவடிக்கையாகவே சமாதானப் பேச்சுக்களை மீளத் தொடங்குமாறு ஜேர்மனி இலங்கை அரசு மீது அழுத்தம் கொடுக்கவுள்ளதாகச் சொல்லப்படுகிறது.

இலங்கைக்கு உதவி வழங்கும் ஜப்பான், ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் உலக வங்கி ஆகியவற்றுடன் ஒப்பிடுகையில் ஜேர்மனி கீழ் மட்டத்திலேயேயுள்ளது.

ஆனால், ஐரோப்பிய ஒன்றியத்தின் தலைமைப் பதவியைக் கொண்டிருக்கும் நாடு என்ற வகையில் ஜேர்மன், அரசியல்

(06ஆம் பக்கம் பார்க்க)

உதயன்
நாள்காட்டி - 2007
உள்ளே ☞

## சகலரும் எதிர்பார்க்கும் தீர்வை புத்தாண்டு கொண்டுவரும்

### வாழ்த்துச் செய்தியில் ஜனாதிபதி நம்பிக்கை



கொழும்பு, ஜன.1

''நாட்டு மக்கள் அனைவரும் எதிர்பார்த்துக் காத்திருக்கும் நிலையான தீர்வைப் புத்தாண்டு கொண்டுவரும்.'' - இப்படித் தனது புதுவருடச் செய்தியில் தெரிவித்திருக்கிறார் ஜனாதிபதி.

அவரது செய்தி வருமாறு:-

''புதுவருடம் பிறக்கும் சமயத்தில் எதிர்காலத்தை நல்ல எதிர்பார்ப்புகளோடு எதிர்கொள்ளும் விதத்தில் புதிய தீர்மானங்களை நாம் எடுத்து, புதிய திடசங்கற்பங்களைச் செய்துகொள்வது வழமை.

அந்த வகையில் இந்தப் புதுவருடமும் நீண்ட காலம் நாம் எதிர்பார்த்துக் காத்திருக்கும் நிலையான தீர்வை நமது மண்ணுக்குக் கொண்டுவரும்; எங்களின் சகல மக்களிடையேயும் நம்பிக்கையையும், புரிந்துணர்வையும் ஏற்படுத்தக் கூடிய ஒரு சந்தர்ப்பத்தை உருவாக்கும்; எங்களின் சமூக, அரசியல் பிரச்சினைகளை நாம் தீர்த்துக் கொள்ளும் வகையில் நம்மை ஒருங்குசேர முன்னோக்கி வழிகாட்டும் என்று நாம் நம்புகிறோம்.

(06ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கு - கிழக்கு இணைப்புக்கு ஐ.தே.க. யோசனை சமர்ப்பிக்கும்

கொழும்பு,ஜன.1

வடக்கு - கிழக்கு இணைப்புக்கு 8 முதல் 10 வருட காலத்துக்கு ஆதரவு வழங்கும் திட்டமொன்றை பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி சமர்ப்பிக்கவுள்ளது.

எதிர்வரும் 8 ஆம் திகதி நடைபெறவுள்ள அனைத்துக் கட்சிக் குழுக் கூட்டத்தில் இதனைச் சமர்ப்பிக்கவுள்ளதாக அந்தக் கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

வடக்கு - கிழக்கு இணைப்புக்கு ஆதரவு தருவதுடன், மாகாணங்களின் இணைப்பை உத்தியோகபூர்வ மாக்க அரசினால் நாடாளுமன்றத்தில் கொண்டுவரப்படும் சட்ட ரீதியான பிரேரணைகளுக்கும் ஐ.தே.கட்சி ஆதரவு வழங்கும். எனினும், இந்த ஆதரவு 8-10 வருடங்கள் மட்டுமே. அதாவது

(06ஆம் பக்கம் பார்க்க)

### புத்தாண்டை வரவேற்போம்



அவலமும், அல்லலும், அவஸ்தையும், அச்சமும் நீங்கி அடக்குமுறையற்ற சுதந்திரமான இயல்புவாழ்வை ஆரம்பித்து வைக்கும் ஆண்டாக இன்று பிறக்கும் 2007 மலரட்டும்.

மக்கள் மனங்கள் தேடி அலையும் அமைதியும் சமாதானமும் கௌரவமும் அவர்களுக்குக் கிடைப்பதாக.

வாசகர்கள், செய்தியாளர்கள், விளம்பரதாரர்கள், விநியோகஸ்தர்கள் மற்றும் அபிமானிகள் அனைவருக்கும் அகமும் புறமும் அமைதிதர புத்தாண்டை வரவேற்று உதயன் வாழ்த்துகின்றான்.

# சதாம் ஹூசைனின் மறைவால் நாட்டில் ஹஜ் பெருநாள் சோபை இழந்தது

### ரவலாக முஸ்லிம்கள் ஜனாஸா தொழுகை நடத்தித் துயரம்

கொழும்பு,ஜன. 1

ஈராக்கின் முன்னாள் ஜனாதிபதி சதாம் ஹூசைனுக்கு ஈராக்கிய நீதிமன்றத்தால் வழங்கப்பட்டிருந்த மரணதண்டனை நேற்று முன்தினம் நிறைவேற்றப்பட்டதால் எழுந்துள்ள துயரமான உணர்வலைகள் காரணமாக நேற்று இலங்கையில் தியாகத் திருநாளாம் ஹஜ் பெருநாள் சோபை இழந்தது.

முஸ்லிம்கள் வாழ்கின்ற பொரும்பாலான பகுதிகளில் பெருநாள் களைகட்டவில்லை. குறிப்பாக கிழக்கு மாகாணத்தில் பெருநாள் கொண்டாட்டங்களைத் தவிர்த்து முஸ்லிம்கள் விசேட ஜனாஸா தொழுகைகளில் ஈடுபட்டனர்.

பெருநாள் கொண்டாடுவதற்காக புத்தாடைகளை வாங்கியவர்கள் அவற்றை அணியாது - வெளியில் எங்கும் செல்லாது வீடுகளில் தங்கியிருந்து தமது சோகத்தை வெளிப்படுத்தினர்.

அநேகமானவர்கள் காலையில் பெருநாள் தொழுகையை நிறைவேற்றுவதற்காகப் பள்ளிவாசல்களுக்குச் சென்று அக்கடமையை மாத்திரம் நிறைவேற்றினர். மேற்கொண்டு எந்தவிதமான பெருநாள் கொண்டாட்டங்களிலும் அவர்கள் ஈடுபடவில்லை.

சில பள்ளிவாசல்களில் குத்பா தொழுகைக்குப் பின்னர் சதாம் ஹூசைன் தூக்கில் இடப்பட்டமையைக் கண்டிக்கும் வகையில் குத்பா பிரசங்கங்களும் நிகழ்த்தப்பட்டன என்று தெரிவிக்கப்படுகிறது. விசேட ஜனாஸா தொழுகைகளும் இடம்பெற்றன.

**கிழக்கில் வெள்ளைக் கொடி**

கிழக்கின் சில இடங்களில் முஸ்லிம்கள் வெள்ளைக் கொடிகளைப் பறக்கவிட்டுத்

(06ஆம் பக்கம் பார்க்க)

## தாமின் உடல் சொந்த ஊரில் அடக்கம்

பாக்தாத்,ஜன.1

ஈராக்கின் முன்னாள் அதிபர் சதாம் ஹூசைனின் ஜனாஸா- 69 ஆண்டுகளுக்கு முன் அவர் பிறந்த ஊரான - திக்றிற் பிராந்தியத்தில் நேற்று அடக்கம் செய்யப்பட்டது. ஒரு சில அரசு அதிகாரிகளும் அடக்கம் செய்யும் பணியாளர்களும் மாத்திரம் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

2003ஆம் ஆண்டு அமெரிக்கப் படைகளால் கொல்லப்பட்ட சதாமின் இரு புதல்வர்களான உதே, ஹூசேய் ஆகிய இருவரது உடல்களும் புதைக்கப்பட்ட

(06ஆம் பக்கம் பார்க்க)



சதாம் ஹூசைனின் உடல் அவரது சொந்த ஊரான ஒளஜாவில் நேற்று அடக்கம் செய்யப்பட்ட இடத்துக்கு மக்கள் நேரில் சென்று கண்ணீர் மல்க அஞ்சலி செலுத்திய காட்சி.

## ஊரடங்கு இன்று வழமையான நேரத்தில்

யாழ்ப்பாணம்,ஜன.1

குடாநாட்டில் ஊரடங்குச் சட்டம் வழமைபோல் இன்று அதிகாலை 4 மணி தொடக்கம் இரவு 8 மணிவரை நீக்கப்பட்டிருக்கும் என யாழ். சிவில் நிர்வாக அலுவலகம் நேற்றிரவு தெரிவித்தது.

புத்தாண்டு வழிபாடுகளில் மக்கள் ஈடுபட வசதியாக நேற்றிரவு ஊரடங்கு முழுமையாக நீக்கப்பட்டிருந்தது என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது. (அ-1)

## வடக்குக்கான ஆளுநராக முன்னாள் பொலிஸ்மா அதிபர்?

கொழும்பு, ஜன.1

வடக்கு மாகாணத்துக்கான ஆளுநராக முன்னாள் பொலிஸ் மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ நிய மிக்கப்படவுள்ளார் எனத் தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

தற்போது வடக்கின் ஆளுநரான மொஹான் விஜயவிக்கிரம, வடக்கிற்குப் பதில் ஆளுநராகவிருக்கின்றார். ஜனவரியின் ஆரம்பத்தில் வடக்கிற்குப் புதிய ஆளுநரை நியமித்துவிடும் தீவிர முயற்சியில் ஜனாதிபதி ஈடுபட்டுள்ளார் எனத் தெரிய வருகிறது.

(06ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## பாடசாலை சேவை

தெல்லிப்பழையில் இருந்து கொக்குவில் ஆரம்ப பாடசாலை, யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை
இரு பாடசாலைகளுக்கான வான் சேவை நடைபெறவுள்ளது.
தொடர்பு: டிலெக்ஷ் கொமினிகேசன்
இல. 24 கே.கே.எஸ். றோட், சுன்னாகம்.
தொ.பே.: 021 222 3568, 3569, 222 5826

## கணனி வகுப்புகள்

அனைத்து மாணவர்களுக்குமான கணனி வகுப்புகள் ஆரம்பமாகின்றன

1. Dip. in MS Office
2. Dip. in Hardware Technology
3. GIT/ ICT
4. Computer Accounting
5. Internet Technology

காலம்: 03-01-2007, 10.00 மணி

STP Your Partner in IT Solutions
73, Palaly Road, Kantharmadam
Jaffna.

## IIS COMPUTER COURSES

விசேட சலுகைக் கட்டணத்தில்
புதிய பிரிவுகள் ஆரம்பம்

| பிரிவு 1 | பிரிவு 2 | பிரிவு 3 | பிரிவு 4 |
|---|---|---|---|
| 05.01.2007 | 06.01.2007 | 21.01.2007 | 22.01.2007 |

**DIPLOMA COURSES :**

- Dip. in Microsoft Office
- Dip. in Internet Technology
- Dip. in Computer Programming
- Dip. in Hardware Technology
- Dip. in Desk Top Publishing

**CERITIFICATE COURSES :**

| | |
|---|---|
| MS Word | Flash MX |
| MS Excel | HTML |
| MS Access | Visual Basic |
| MS Power Point | Visual C |
| Adobe Photoshop | Java |
| Adobe PageMaker | Corel DRAW |

கணனிக் கல்விக்கு தனித்துவம் மிக்க IIS நிறுவனத்தில் இணைவதனூடாக
கணனி உலகில் நீங்கள் அங்கீகரிக்கப்படுகின்றீர்கள்

Institute of Informatics Studies
# 100, Clock Tower Road, Jaffna.
T.P. : 021 222 2831

கஷ்டங்கள் யாவும் நீங்கி
கவலைகள் எல்லாம் மறைய
பிறக்கும் புத்தாண்டே நீ வரம் ஒன்று தரவேண்டும்

## மகளிர் பொற் கணக்கு



* கூடிய வட்டி
* காப்புறுதி வசதி
* கடன் வசதி

வேறு பல நன்மைகள்
மேலதிக விவரங்களுக்கு:
அருகிலுள்ள இலங்கை வங்கிக் கிளையை நாடுங்கள்.

BOC
Bankers to the Nation
(அ-51721)

---

IIS இன் புதுவருட நல்வாழ்த்துக்கள்

எமது மாணவர்கள், நண்பர்கள், நலன்விரும்பிகள், அன்பர்கள் அனைவருக்கும் IIS இன் இதயங் கனிந்த புதுவருட நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்

Institute of Informatics Studies
# 100, Clock Tower Road, Jaffna.
T.P. : 021 222 2831

IIS CITY CAMPUS
# 200, Stanley Road, Jaffna
TP No. : 021 222 8060 Fax : 021 222 8833
Email : iiscc@sltnet.lk
(அ-517738)

எமது அன்பர்கள், நண்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்

நவநாகரிகமான ஆடைத்தெரிவுகளுக்கு நம்பிக்கையோடு நாடுங்கள்

## லைடன் புடைவை நிலையம்

இல : 410, ஆஸ்பத்திரி வீதி
(பஸ்நிலையம் முன்பாக)
யாழ்ப்பாணம். 021 222 2381
(அ-517737)

## நாகம்ஸ் சினிமா

சுன்னாகம்
01.01.2007 முதல்
ஜெயம்ரவி, திரிஷா, பிரகாஷ்ராஜ் நடித்த
**சம்திங் சம்திங் உனக்கும் எனக்கும்** (ரீலீஸ்)
தினசரி: 11.00, 3.00

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

### அமரர் தங்கம்மா ஆறுமுகராஜா

தோற்றம் 28.08.1923 — மறைவு 02.12.2006

02.12.2006 அன்று இறைபதம் அடைந்த எம் அன்புத்தெய்வத்தின் இறுதிச்சடங்கில் கலந்துகொண்டவர்களுக்கு நன்றியைத் தெரிவிப்பதோடு 01.01.2007 இன்று நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

பட்டினசபை வீதி,
மானிப்பாய். (65391) குடும்பத்தினர்.

## இரண்டாம் ஆண்டு நினைவலைகள்



மண்ணுலகில் 18 07 1933 — விண்ணுலகில் 24 12 2004

### அமரர் கணபதிப்பிள்ளை குணசிங்கம்

(திதி : திரியோதசி 01.01.2007)

எங்கள் குடும்பத்தின் குல தெய்வமே எங்கள் சூரிய விளக்கே - அப்பா எங்களை விட்டு நீங்கள் பிரிந்து இரண்டாண்டல்ல பல்லாண்டு சென்றாலும் எங்கள் அப்பாவை மறக்க முடியுமா?

44/2, மணல் தரை,
கந்தர் மடம். (65388) பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி நளாயினிதேவி நல்லலிங்கம்



காரைநகர், மாப்பாணவூரியைப் பிறப்பிடமாகவும் நீதிமன்ற வீதி, திருகோணமலையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நளாயினிதேவி நல்லலிங்கம் நேற்று (31.12.2006) ஞாயிற்றுக்கிழமை திருகோணமலையில் காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (02.01.2007) செவ்வாய்க்கிழமை பி.ப. 3மணிக்கு திருகோணமலையில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

38/1, நீதிமன்ற வீதி,
திருகோணமலை.
தொ.பே:026 2225909
திருமதி.சி.கந்தையாபிள்ளை,
நடுத்தெரு, காரைநகர்.

### அன்னலக்ஷ்மி கந்தையா

வட்டுக்கோட்டை கிழக்கைச் சேர்ந்த அன்னலக்ஷ்மி கந்தையா 30.12.2006 சனிக்கிழமை இறைபதமெய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம் கந்தையாவின் (Lotus) அன்பு மனைவியும் காலஞ்சென்ற கண்மணி, முத்துக்குமாரசாமி, வெள்ளியம்பலம், நடராசா (சட்டத்தரணி) ஆகியோரின் அன்புச் சகோதரியும் சத்தியசீலன் (சட்டத்தரணி), ஸ்ரீஸ்கந்ததாஸ், ஸ்ரீசந்திரதாஸ் (கனடா), சந்திரலேகா (ஆஸ்திரேலியா), சித்திரலேகா (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத் தாயும் பூம்பாவை, சியாமளா, புஷ்பராணி, நந்தகோபன், ராஜலிங்கம் ஆகியோரின் அன்பு மாமியும் சிலாந்தி, ஜரிசன், அரவிந்தன், ராஜ்குமார், ரமேஸ்குமார், அபிராமி ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் 02.01.2007 செவ்வாய்க்கிழமை மு.ப.10மணியளவில் அவரது இல்லத்தில் அஞ்சலிக்கு வைக்கப்பட்டு, கிரியைகள் நடைபெற்று பி.ப. 4மணிக்கு கனத்தை மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

37/1, நெல்சன் பிளேஸ்,
வெள்ளவத்தை.
தொ.பே:2581453 (அ-517478)

---

## வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



### அமரர் பொன்னுச்சாமி பாலவடிவேல்

(ஓய்வு பெற்ற மேல் நீதிமன்ற நீதிபதி, சட்ட உசாவுநர், வடக்கு கிழக்கு மாகாண சபை, திருகோணமலை)

தோற்றம் 08.01.1932 — மறைவு 04.12.2006

வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும் திருகோணமலையை வதிவிடமாகவும் கொண்டு கடந்த 04.12.2006 பூரணைத் திங்கள் சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவரின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்ட அனைவருக்கும், தொலைபேசி, தந்தி மூலம் அனுதாபம் தெரிவித்தோருக்கும், உறவுகளின் இல்லங்களுக்குச் சென்று துயர்பகிர்ந்தோருக்கும் யாழ்.நாளிதழ்களில் கண்ணீர் அஞ்சலி செலுத்தியோருக்கும் கௌரவ பா.உ. க.சிவாஜிலிங்கம், நீதித்துறை, சமூக சேவை, சிறுவர் நன்னடத்தை, கைதடி முதியோர் இல்ல, அரச சிறுவர் இல்ல, சான்று பெற்ற பாடசாலை உத்தியோகத்தர்களுக்கும் பெரியோருக்கும் எமது இதயபூர்வமான நன்றிகளை நவில்கிறோம். அத்தோடு மார்கழி மாதம் 19ஆம் நாள் (03.01.2007) புதன்கிழமை மு.ப 11மணியளவில் எமதில்லத்தில் நடைபெறும் சபிண்டீகரண வீட்டுக் கிரியைகளிலும் மதியபோசனத்திலும் கலந்துகொண்டு அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

1166, பாலையூற்று,
திருகோணமலை, தொ.பே:- 026 222 2209
மனைவி, மகள், மகன், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
(65382)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலியும் ஆண்டுத் திதி அழைப்பும்



### அமரர் சின்னத்தம்பி இராசையா (இராசு)

(அச்சுவேலி தெற்கு)
(திதி - 01.01.2007 மார்கழி பாஷ திரயோதசி)

தோற்றம்:16.07.1937 மறைவு:11.01.2006

ஆண்டு ஒன்றுதான் ஓடி மறைந்தது அழுதத்தினால் உங்களின் நினைவுகள் துளிர்த்தன. நேற்றுப் போன்றதோர் நினைவுகளில் மிதக்கின்றோம். நீங்கள் காட்டிய நன்நெறியில் வாழ்கின்றோம். உங்களின் ஆத்மா சாந்தி வேண்டியே உறவுகள் நாங்கள் வேண்டுதல் செய்கின்றோம். ஆண்டுகள் எத்தனை ஓடி மறைகினும் தேயா நினைவென நெஞ்சகத் திருந்து எங்களை வழிநடத்திடுவீர் அன்பு நிறைந்த எங்கள் அப்பாவே!

01.01.2007 திங்கட்கிழமை இன்று அன்னாரது வவுனியா இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திக் கிரியைகளிலும் மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

40A ஞானவைரவர் கோயில் வீதி:
2ஆம் குறுக்கு ஒழுங்கை, வவுனியா.
தொ.பே: 024 222 1658 (அ-51729)
மனைவி பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், மைத்துனர் (மகேந்திரம் - இந்திராணி தம்பதியர்.)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

### அமரர் பொன்னுத்துரை தர்மதாஸ் (ரவி)

([illegible])



தோற்றம் 15.09.1958 — மறைவு 01.01.2006

எங்கள் உணர்வுக்குள் உறைந்திருக்கும் அப்பாவே
ஓராண்டுகள் என்ன ஒன்பதாண்டுகள் சென்றாலும்
நாம் எங்கு தான் நின்றாலும் உம் நினைவுகள்
எம்மை விட்டகலாது தந்தை பாசத்தை சிந்தை குளிரத்
தந்தவரே எம்மைத் தவிக்கவிட்டு எங்கே தான்
சென்றாலும் அப்பாவின் நினைவுகள் எம்மை விட்டகலாது.

இவரின் ஆன்ம இளைப்பாற்றிற்காக 03.01.[illegible] புனித செபமாலை மாதா ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்படும் இரங்கல் திருப்பலியில் கலந்து கொண்டு செபிக்க அன்புடன் அழைக்கின்றோம்.

345/2, துண்டிச் சந்தி,
கொழும்புத்துறை. (65356)
தகவல்: [illegible]
மனைவி பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## 20 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
### யுவக்கீம் அலெக்சாண்டர் செல்வநாயகம்

மலர்வு 23- 02-1926 — உதிர்வு 01-01-1987

[illegible]

53/1, மவுண்ட் காமல் வீதி,
யாழ்ப்பாணம். (65341)
மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி சிவக்கொழுந்து சுப்பிரமணியம்

கரணவாய் தெற்கு வலவந்தோட்டத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவக்கொழுந்து சுப்பிரமணியம் 31.12.2006 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சந்திரசேகரம் ஆச்சிப்பிள்ளையின் சிரேஷ்ட புதல்வியும் கதிரித்தம்பி சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான குலசிங்கம், இராஜசிங்கம் மற்றும் யோகாதேவி, திலகவதி, விமலம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் சிறிபாஸ்கரன், அமிர்தலிங்கம், பாலசாந்தினி ஆகியோரின் அன்புத் தாயும் இரத்தினமாலா, ரேணுகா, கிருபைராஜா ஆகியோரின் அன்பு மாமியும் கௌசி, தினேஸ், சர்மிலா, அஸ்மின், வாசவன், பிரணவன், பிரணவி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.01.2007) திங்கட்கிழமை நண்பகல் 12 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பூவரசந்திட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வலவன் தோட்டம்,
கரணவாய் தெற்கு, கரவெட்டி.
தொ.பே. 021 226 4169
தகவல்: க.சுப்பிரமணியம் (கணவர்)

### தம்பிஐயா பஞ்சலிங்கம் (ஆசாரி)

காளிகோயிலடி, தாவடி வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிஐயா பஞ்சலிங்கம் (ஆசாரி) நேற்று (31.12.2006) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிஐயா - நாகம்மா தம்பதியரின் அன்பு மகனும் நகுலாம்பிகையின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான முத்துக்குமாரு - பரிபூரணம் தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ் சென்ற சுப்பிரமணியம் மற்றும் மகேஸ்வரி, சிவபாக்கியம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.01.2007) திங்கட்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

காளி கோயிலடி, தாவடி வடக்கு, கொக்குவில்.
தகவல்: மனைவி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தாண்டு வாழ்த்துச் செய்திகள் – 2007

## இவ்வாண்டில் எப்படியாவது அமைதியை நிலைநாட்ட நல்மனதுடன் உழையுங்கள்



இவ்வாண்டில் எப்படியாவது சமாதானத்தை அடைய நல்மனதோடு உறுதியாக உழைக்கும்படி இலங்கை அரசையும் விடுதலைப் புலிகளையும் கோருகிறேன்.

கத்தோலிக்க திருச்சபையின் தலைவரான 16ஆம் பெனடிக்ற் பாப்பரசர் நத்தார் தினத்தன்று வழங்கிய வாழ்த்துச் செய்தியில் இலங்கையில் மோதலில் இருக்கும் இரு தரப்பினரும் மக்களின் எதிர்கால சகோதரத்துவத்தையும் ஒருமைப் பாட்டுவிருப்பையும் கவனத்தில் கொண்டு செயற்பட வேண்டுமென இறைவனை வேண்டுகின்றோமென தெரிவித்துள்ளதுடன் இலங்கையில் அமைதி காண முடியாத போர்நிலை குறித்தும் தமது கவலையை வெளியிட்டுள்ளார். எல்லா மோதல்களுக்கும் சமாதானத்தின் வழி தீர்வு காணப்படவேண்டும் என அவர் மேலும் வலியுறுத்தியுள்ளார்.

சமாதானம் என்பது கடவுளால் கொடுக்கப்படும் ஒரு கொடை மட்டுமல்ல, அது கடவுளின் திட்டப்படி ஒவ்வொருவர் மேலும் சுமத்தப்பட்ட ஒரு பணியுமாகும். எனவே, ஒவ்வொரு மனிதனும் இப்பணியை விழிப்புணர்வுடன் ஆற்ற கடமைப்பட்டுள்ளான்.

உலக சமாதான தினமான இன்று எமது நாட்டில் நீதியோடு கூடிய நிலையான அமைதி தோன்ற வேண்டுமென செபிப்பதும் உழைப்பதும் சமாதான நல்மனது கொண்ட அனைவரின் பணியுமாகும்.

யாழ். ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை.

## வரலாறு புகட்டும் பாடங்களை புரிந்து கொண்டு செயற்படுவோம்



புதிய ஆண்டு பிறக்கின்றதென்ற நினைப்பு மனதுக்கு ஒருவகைக் குதூகலத்தையும் நம்பிக்கையையும் கொண்டு வருவதாகும். அத்தகைய ஒரு மனநிலையில் எமது கடந்த காலத்தையும் வருங்காலத்தையும் சரியானவற்றையும் தவறானவற்றையும் இழந்தவற்றையும் எய்த வேண்டியவற்றையும் ஒழிக்க வேண்டியவற்றையும் காக்க வேண்டியவற்றையும் காப்பாற்றவும் எதையெல்லாமோ செய்கின்றோம். அதுவே பின்னர் வினையாகியும் விடுகின்றது. புதிய ஆண்டினை வரவேற்கும் வேளையில், தீயவற்றைப் புறங்காணவும் நல்லவற்றைப் பேணி வளர்க்கவும் திடசங்கற்பம் பூணுவோம்.

எஸ்.கே.கதிகாமர் - யாழ். பிராந்திய குரு முதல்வர்,
இலங்கை மெதடிஸ்த திருச்சபை.

## சுதந்திர வாழ்வு பிறக்கட்டும்

மக்கள் தாம் அனுபவித்த துயரங்களும் துன்பங்களும் முற்றாக அகன்று நிம்மதியான வாழ்வு ஏற்பட்டு தத்தம் இடங்களில் சுற்றத்தாருடன் மகிழ்ச்சிகரமான வாழ்க்கையை மேற்கொள்ளக்கூடிய சூழ்நிலை ஏற்படவேண்டும் என்பதே இப்புத்தாண்டில் எல்லோரும் செய்யும் பிரார்த்தனையாகும். தை பிறந்தால் வழி பிறக்கும் என்பதற்கு அமைய தமிழ் மக்கள் வாழ்வில் புதிய இன்பகரமான அமைதியான சுதந்திரவாழ்வு பிறக்கவேண்டும் என எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக் கின்றோம்.

க.சோமசுந்தரக் குருக்கள் - அனைத்துலக சைவக்குருமார் அர்ச்சகர் பேரவை.

## மக்களின் நிம்மதியான வாழ்வு உறுதியாகட்டும்



பாதைகளைத் திறந்து மக்களுக்கு சீரான உணவு விநியோகத்தை மேற்கொண்டு, உணவுத் தட்டுப்பாடு, பட்டினிச் சாவை நீக்குமாறு எமது அமைப்பு உட்பட பல்வேறு மதம் சார்ந்த அமைப்புகள் ஜனாதிபதிக்கு அவசர கடிதம் மூலம் வேண்டுகோள் விடுத்தபோதும் அது கைகூடவில்லை.

எனவே, மலரப்போகும் புதிய ஆண்டிலாவது சகல தரப்பும் பகைமையை மறந்து உறுதியான, நிரந்தரமான சமாதானம் மூலம் மக்களது சுதந்திரமான, நிம்மதியான வாழ்க்கையை உறுதிப்படுத்தவேண்டும் என எல்லாம் வல்ல வல்லை ஸ்ரீ முத்துமாரித் தாயை பிரார்த்தித்து நிற்கின்றேன்.

சிவஸ்ரீ சோமாஸ்கந்த தண்டபாணிக தேசிகர்
அகில உலக சைவக்குருமார் சம்மேளனத் தலைவர்

## புதிய நம்பிக்கையும் புத்துணர்ச்சியும் புத்தாண்டில் பிறக்கட்டும்



மிக நெருக்கடியான வேளையில் பிறக்கும் புதுவருடமானது நாட்டில் வாழும் அனைவருக்கும் அமைதியையும் மகிழ்ச்சியையும் பிறக்கச் செய்யும் புத்தாண்டாக அமையட்டும். விடைபெற்றுப்போகும் 2006 ஆம் ஆண்டு எமது மக்களுக்கும் நாட்டுக்கும் ஏமாற்றங்களையும் பதற்றங்களையும் தந்து விலகிச் செல்கிறது. ஆகவே, பிறக்கும் புத்தாண்டிலாவது நம்பிக்கையற்ற, பதற்றமான சூழல் இல்லாது போய் புதிய நம்பிக்கையும் புத்துணர்ச்சியும் பூரிப்பும் மலரட்டும். பிறக்கும் புத்தாண்டில் யுத்த முனைப்புகள் கைவிடப்பட்டு சமாதானத்துக்கான கதவுகள் அகலத் திறக்கட்டும். இதுவே அனைத்து மக்களினதும் எமதும் எதிர்பார்ப்பாகும். பேச்சுவார்த்தையூடாக இனப்பிரச்சினைக்கு கௌரவமான அரசியல் தீர்வுகாணப்பட்டு மகிழ்ச்சியுடன் மக்கள் தலை நிமிர்ந்து வாழ்கின்ற நாளுக்காக அயராது உழைப்பதுவே புது வருடத்தில் நாம் உறுதி எடுத்துக்கொள்ளும் இலக்காகும்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா.

## இனிய ஆண்டாகப் பிறந்திடு புத்தாண்டே!

இன்று பிறக்குது புதிய ஆண்டு
இனிய செய்திகள் ஏதாவது பிறக்குமா?
என்றும் எமக்கு இருண்ட வாழ்க்கையா?
இனியும் பழைய 'பஞ்ச' புராணமா?
என்றோ ஒருநாள் முடிவு வருமென
ஏங்கி ஏங்கி வாழ்ந்து வருகின்றோம்
என்றுதான் விடிவு என்றுதான் நிம்மதி
இனிய ஆண்டாகப் பிறந்திடு புத்தாண்டே!

கவிஞர் வ.யோகானந்தசிவம்

## புத்தாண்டு நல்லவற்றுக்கு அடிகோல வேண்டும்



சிவபூமி எனப்படுகின்ற புண்ணிய நாடான எமது ஈழ நாட்டிலே வாழ்கின்ற அனைத்து மக்களும் அல்லல் அகன்று அன்பு வயப்பட்டு இன்ப ஊற்றுக்குள் அகப்பட்டு ஆனந்த வாழ்வில் அகங்குளிர வேண்டுமென்று ஆண்டவனை உளமாரப் பிரார்த்தித்து அருளாசி வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றோம்.

இதுவரைநாளும் பட்ட இன்னல்கள் யாவும் சூரியனைக் கண்ட பனிபோல விலகி அனைவரும் மகிழ்வுடனிருக்க கலியுக வரதனாகிய கந்தப் பெருமான் கருணை மழை பொழிய வேண்டும் என அவன் பாதபங்கயம் பணிந்து மலர் தூவி அர்ச்சித்து வணங்கி வழுத்தி அருளாசிகளை நல்கின்றோம். வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும் தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவனை ஏத்தி ஏத்தித் துதித்து இனியாவது இன்ப வாழ் வுக்கு வழி வகுக்க வேண்டும் என்று வந்தித்து வழிபட்டு சிந்தித்து நிற்கின்றோம்.

'என்றும் வேண்டும் இன்ப அன்பு'

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்
இரண்டாவது குருமகா சந்நிதானம்

## சாந்தி சமாதானம் நிலவட்டும்

துன்பங்கள், துயரங்கள், கஷ்டங்கள் அனைத்தும் நிறைந்த 2006ஆம் வருடம் நீங்கி இன்றைய நன்நாளில் புதுவருடம் உதயமாகியுள்ளது. 7ஆம் இடம், களத்தில் தானத் தைக் குறிக்கும். களத்திர எண்ணைக் கொண்டு ஆரம்பிக்கும் 2007ஆம் வருடத்தில் நாட்டில் சாந்தி, சமாதானம், சகோதரத்துவம் நிலைத்து நீடிக்கவும், தமிழ் மக்கள் படும் அவலங்கள் யாவும் நீங்கி எல்லோரும் இன்புற்று சிறப்பாக வாழவும் நாமனைவரும் இறைவனைப் பிரார்த்திப்போமாக. அனைத்து மக்களுக்கும் ஆசி களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

சிவப்பிரம்மஸ்ரீ பரமேஸ்வர மனோகரசிவாச்சாரியார்

## மனித நேயம் மாண்புடன் மலர இறைவனை வேண்டுவோம்



வாடி வதங்கி வழியற்று வருந்திய வாழ்வு தந்த ஆண்டை வழியனுப்பி புதிய ஆண்டை வரவேற்போம். நல்லன நடக்கும் என்ற நம்பிக்கையோடு திடசங்கற்பம் கொள்வோம். கடலுக்குக் கூட எல்லை வைத்த கடவுள் எங்கள் கண்ணீருக்கு எல்லை வைக்க மாட்டாரா? என்ற சிந்தனையோடு இறைவனை இருகரம் கூப்பி வழிபடுவோம். இருண்ட உலகில் இருந்து எம்மை, நாம் வணங்கும் தெய்வங்கள் காக்கும் அஞ்சாதீர்கள்! புதிய எண்ணங்களோடு புத்தாண்டை வரவேற்றுக் கொள்ளுங்கள். எங்கள் மண்ணில் மகத்தான காரியங்கள் நடைபெற்று, மனிதநேயத்தை மாண்புடன் காப்பாற்ற இறைவனை இந்நாளில் மன்றாடுவோம்.

செஞ்சொற் செல்வர் ஆறு.திருமுருகன்.

# மாணவர் கற்கக்கூடிய சூழலை அரசும் இராணுவமும் ஏற்படுத்த வேண்டும்

### யாழ். மாவட்டத் தமிழ் மாணவர் ஒன்றியம் அறிக்கை

யாழ்ப்பாணம்,ஜன.1

குடாநாட்டில் மாணவர்கள் கற்கக்கூடிய சூழல் ஏற்படுத்தல் என்பது எட்டாத இடத்திலேயே உள்ளது.

- இவ்வாறு யாழ். மாவட்ட தமிழ் மாணவர் ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கடந்த 11.08.2006அன்று குடாநாட்டில் ஏற்படுத்தப்பட்ட அசாதாரண சூழல் தொடர்ந்த வண்ணம் இருக்கின்றது. யாழ். குடாநாட்டின் பிரதான விநியோகப் பாதையான ஏ-9 சாலை மூடப்பட்டு திறந்த வெளிச்சிறைக் கூடமாக மாற்றப்பட்ட குடாநாட்டில் அவலங்களைச் சுமந்தபடி ஆறு லட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் அல்லற்படுகின்றார்கள். மக்களது அத்தியாவசிய உயிர்வாழ்வதற்குத் தேவையுடைய அனைத்தையும் முடக்கி மிகப்பெரும் அநீதியை மஹிந்த அரசு இழைத்துவருகின்றது.

குடாநாட்டில் நிலவிவரும் கடத்தல்கள், கொலைகள், கெடுபிடிகள், உணவுப்பஞ்சம், தொழிற்தடைகள், பொருள் தட்டுப்பாடு, பொருள்களின் விலையேற்றம் என்பன மாணவர்கள் பாடசாலை செல்லும் நிலைமையையும் கற்கும் சூழலையும் தூர விலத்தி வைத்திருக்கின்றது. மேற்படி சம்பவங்கள் அரசின் நேரடியான செயற்பாடாக வெளிப்படையாகத் தெரிந்தும் சர்வதேசம் அவற்றைக் கண்டிக்காது மௌனம் காத்துவருகிறது.

நாளை ஆரம்ப மாகவிருக்கும் பாடசாலைகளுக்கு மாணவர்கள் செல்லும்போது பாரிய இடர்பாடுகளை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

மாணவர்கள் பாடசாலைசென்று வருவதற்கு துணைபுரியும் பொருள்களும் குடாநாட்டில் பெற்றுக்கொள்ளவே முடியவில்லை. மாணவர்கள் கற்கக்கூடிய சூழல் என்பது எட்டாத இடத்திலேயே உள்ளது. இலங்கை அரசு குடாநாட்டு மக்களை வாட்டிவதைத்து உலகை ஏமாற்றி வருகின்றது.

குடாநாட்டில் கல்வி கற்றுவரும் மாணவர்களின் கல்வி கற்கும் உரிமையைப் பறித்து அவர்களின் வாழ்வுடன் விளையாடிக் கொண்டிருக்கும் மஹிந்த ராஜபக்ஷ தனது அடக்குமுறைப் பாணியை உடனடியாகக் கைவிட்டு மாணவர்கள் கற்பதற்குரிய உரிமையை வழங்கவேண்டும். நாளை பாடசாலைகள் ஆரம்பமாகக்கூடிய சூழல் உருவாக அரசும் இராணுவமும் அனுமதிக்க வேண்டும். பூசி மெழுகாமல் குடாநாட்டு மக்களின் அவலங்களைப் புரிந்துகொண்டு கருமமாற்ற அனைத்துத் தரப்பும் முன்வரவேண்டும் - என்றுள்ளது. (203)

## சைக்கிள் அன்பளிப்பு

வலி.தென்மேற்கு,ஜன.1

மாதகல் சகாயபுரத்தைச் சேர்ந்த 18 மாணவர்களுக்கு யாழ். கிறிஸ்தவ ஒன்றியம் 18 சைக்கிள்களை வழங்கியுள்ளது. மாதகல் புனித தோமையர் ஆலய வளாகத்தில் வைத்து இந்தச் சைக்கிள்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (203-135)

## வீட்டுத்தோட்ட நாற்றுகள் வழங்கப்படவுள்ளன

யாழ்ப்பாணம்,ஜன.1

இலங்கை செஞ்சிலுவைச் சங்க தெல்லிப்பழைப் பிரிவின் ஆயுள்கால, துரித-2006 அங்கத்தவர்களுக்கு எதிர்வரும் 7ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு பிரிவு அலுவலகத்தில் வைத்து இலவசமாக வீட்டுத்தோட்ட நாற்றுகள் வழங்கப்படவுள்ளன. (203)

## விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

யாழ்ப்பாணம்,ஜன.1

தீவக் கல்வி வலயத்தில் வேலணைக் கோட்டக் கல்விப் பணிப்பாளர், உதவிக் கல்விப்பணிப்பாளர் (சங்கீதம்) ஆகிய பதவிகளில் நிலவும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பங்களை எதிர்வரும் 10ஆம் திகதிக்கு முன்னர் வலயக் கல்வி அலுவலகத்திற்கு அனுப்பிவைக்குமாறு வேலணை வலயக் கல்விப் பணிப்பாளர் எ.ராஜேந்திரன் கேட்டுள்ளார். (202)

## முன்பள்ளி ஆசிரியர்களுக்கு மா வழங்க ஏற்பாடு

யாழ். மாவட்டத்திலுள்ள முன்பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியைகளுக்கு கோதுமை மா வழங்கப்படவுள்ளது.

உலக உணவுத் திட்ட நிறுவனத்தினர் அந்தந்த உள்ளூராட்சி சபைகள் ஊடாக முன்பள்ளி ஆசிரியைகளுக்கு மா வழங்கவுள்ளனர். இந்நிறுவனத்தினர் முன்பள்ளி ஆசிரியைகளுக்கு ஏற்கனவே அரிசி, சீனி, பருப்பு போன்றவற்றை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (203)

## செத்தல் மிளகாய்க்கு பெரும் தட்டுப்பாடு

குருநகர், ஜன.1

யாழ்ப்பாணத்தில் செத்தல் மிளகாய்க்கு பெரும் தட்டுப்பாடு நிலவி வருகிறது. மிளகாயை கைவசம் வைத்துள்ள வியாபாரிகளும் இத்தட்டுப்பாடு காரணமாக கிராம் அளவுகளிலேயே பொதுமக்களுக்கு விற்பனை செய்கிறார்கள். ஒரு கிலோ செத்தல் மிளகாய் ஆயிரம் ரூபாவிற்கு மேல் விற்பனை செய்யப்பட்டு வருகின்றது. (204-51)

# பதிவுச் சான்றிதழ்கள் வழங்கும்பணி இன்று கரவெட்டிப் பிரதேச செயலகத்தில் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஜன.1

கரவெட்டிப் பிரதேச செயலகத்தில் இன்று திங்கட்கிழமை தொடக்கம் பிறப்பு, இறப்பு, விவாகப் பதிவுச் சான்றிதழ்கள் வழங்கும் பணி ஆரம்பிக்கப்படவுள்ளது என பிரதேச செயலர் சி.சத்தியசீலன் தெரிவித்தார்.

உடுப்பிட்டி, கரவெட்டி பதிவாளர் பிரிவுகளுக்குரிய ஆவணங்களும் கட்டைவேலி பதிவாளர் பிரிவில் 1.7.1974இற்கு முற்பட்ட பதிவுகளுக்குரிய ஆவணங்களும் இந்த அலுவலகத்தின் ஊடாக வழங்கப்படவுள்ளன.

மந்திகை அரசினர் வைத்தியசாலையில் இடம்பெற்ற பிறப்பு, இறப்புக்கான பதிவுகளுக்கான பதிவுகளும் 1.7.1974 இற்குப் பிற்பட்ட கட்டைவேலி பதிவாளர் பிரிவுகளுக்கான ஆவணங்களும் தொடர்ந்தும் பருத்தித்துறை மேலதிக மாவட்டப் பதிவாளர் அலுவலகம் ஊடாகவே வழங்கப்படும் என்றும் - பிரதேச செயலர் மேலும் தெரிவித்துள்ளார். (202)

# வறுமைக்கோட்டின் கீழ் உள்ளவர்களுக்கு மருத்துவத்திற்கு உதவுதொகை

### சமூக சேவைகள் அமைச்சு நாளை வழங்கும்

யாழ்ப்பாணம்,ஜன.1

குடாநாட்டில் வறுமைக்கோட்டின் கீழ் உள்ளவர்களுக்கான மருத்துவ உதவித் தொகைகள் நாளை செவ்வாய்க்கிழமை சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவால் அவரின் யாழ். அலுவலகத்தில் வைத்து வழங்கப்படவுள்ளன என அமைச்சு தெரிவித்துள்ளது.

உதவித் தொகை வழங்கும் திட்டத்தின் கீழ் இதுவரை பதிவுசெய்தவர்களுக்கே இந்த உதவி வழங்கப்படவுள்ளது என்றும் - பதிவு செய்யாதோர் அமைச்சரின் யாழ். அலுவலகத்திலும் பிரதேச செயலகங்களிலும் பதிவு செய்யலாம் என்றும் அமைச்சு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (202)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நினைவில் மலரும் (செம்பியன்)



பிறப்பு 01-01-1943 — இறப்பு 20-05-2005

சுடு பாலை மணலில்
நடு சோலை நிழலாய்
கனி தந்து மகிழும்
பேரீந்து மரமாய்
புயல் வீசி எறியும்
மணற் குன்று வழியில்
தடம் காட்டும் பதிவால்
தொடரும் உன் சுவடு

கவிஞர் சத்தியா

மனதில் சுமந்த உம்மை
நினைவில் சுமக்கும்
மகன், மனைவி,
குடும்பத்தினர்.

அத்தியடி. (65203)

## 46 ஆம் நாள் நினைவஞ்சலி

**தேவராசா மனோராஜ்** (மோகன்-பிரபல வாகன வர்த்தகத் தரகர்)



அன்னை மடியில் 07-03-1976 — ஆண்டவன் அடியில் 17-11-2006

சிங்காரச் சிரிப்பும் சூரியப் பிரகாசமும்
அழகான மிடுக்கான தோற்றமும் கொண்ட
உன்னை இனி எப்போது காண்போம்
ஏங்கித் தவிக்குதே எம் இதயம்
ஷெல் வீச்சால் இடம் பெயர்ந்து
அல்லல் உறும் நேரத்தில் இக்கொடுமை மரணமா?
உன் வஞ்சமில்லா நெஞ்சுபோல்
அனைவரையும் நம்பினாய் அனைவருக்கும் உதவினாய்
பயன் இம்முடிவுதானோ.
ஆறாது ஆறாது அழுதாலும் தீராது இத்துயரம்.


18.11.2006 இல் நடைபெற்ற மரணச் சடங்கில் துயர்பகிர்ந்து கொண்ட எமது குடும்ப நண்பர்களுக்கும், ஆசிரிய நண்பர்களுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

பருத்தித்துறை வீதி, கொடிகாமம். (65370)

கிளிச்சித்தி குடும்பத்தினர் (இரவீந்திரன் விமலா).

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

**பசுபதி பழனி**



தோற்றம் 10.07.1964 — மறைவு 11.01.2006

அல்லும் பகலும் எமது அருகில் இருக்கும் அப்பாவே! பல்லக்கில் ஏறி எங்கப்பா போனீர்கள்? முத்தமழை பொழிந்து எத்தனை நாள் ஆச்சுதப்பா வருவீர் என வழிபார்த்து விழி இழந்தோம் இன்னும் ஏன் வரவில்லை எம் இனிய அப்பாவே!!!

முகவரி: பகுத்தறிவு லேன், அம்மன் வீதி, திருநெல்வேலி. (65320)

மனைவி, பிள்ளைகள், மாமியார்.


## அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

844 சிவப்பு

வெற்றி இலக்கங்கள்

01 34 45 54

தனுசு

29-12-2006

செல்லுபடியாகும் தொடர் இல. 5628022 - 5642773

ஜக்பொட் பரிசு ரூபா. 8,930,200/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 327,175 | 10/- | 3,271,750/- |
| 2 இலக்கங்கள் | 30,057 | 20/- | 601,140/- |
| 1 இல. + லக்கினம் | 29,719 | 30/- | 891,570/- |
| 2 இல. + லக்கினம் | 2,781 | 100/- | 278,100/- |
| 3 இலக்கங்கள் | 802 | 500/- | 401,000/- |
| 3 இல. + லக்கினம் | 64 | 5,000/- | 320,000/- |
| 4 இலக்கங்கள் | 5 | 100,000/- | 500,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 8,930,200/- | - |
| மொத்தம் | | | 6,263,560/- |
| முச்சக்கர வண்டிகளின் பெறுமதி | 5 | 204,700/- | 1,023,500/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 390,608 | | 7,287,060/- |

இந்த செவ்வாய்க்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 9,295,600/-

தொடர் இல.4754555 க்கு மேற்பட்ட நீல நிற டிக்கட்டுக்கள் 2007 ஜனவரி 02 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சீட்டிழுப்புக்குச் செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில் முச்சக்கரவண்டி வெற்றி பெறும் ஐந்து டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| புத்தளம் | 5629898-0-81 |
| அனுராதபுரம் | 5639413-9-96 |
| கேகாலை | 5636787-2-46 |
| நுவரெலியா | 563294[illegible] |
| கொழும்பு | 564070[illegible] |

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை

33, சேர் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03


### சிவபூமி சிறுவர் மனவளர்ச்சிப் பாடசாலை புதிய மாணவர் அனுமதி - 2007

மனவளர்ச்சி குறைபாடுடைய சிறார்களின் கல்வி விருத்தி தொடர்பாக இயங்கும் எமது பாடசாலையில் புதிய மாணவர் சேர்த்துக்கொள்ளப்படுவர்.

**வயது 5 முதல் 16 வரை**

அதிபர், சிவபூமி பாடசாலை, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில். (65305)

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் அபிவிருத்திச் சங்கச் செயலாளர் **பிரம்மஸ்ரீ ப.சிவசங்கரக்குருக்கள்** அவர்களின் அன்புத் தந்தை

**பிரம்மஸ்ரீ கு.பரமசிவக்குருக்கள்**

அவர்களின் மறைவு குறித்து எமது கண்ணீர் அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். (65315)

யா/தாவடி இ.த.க.பாடசாலை, அதிபர், ஆசிரியர்கள், அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் சங்கம்.

## துயர் பகிர்கின்றோம்

**அமரர் வி.செல்வரத்தினம்**
(நடிக கலாமணி - அரியாலை)



இசை நாடகங்களிலே சந்திரமதியாய்,
சாவித்திரியாய், கண்ணகியாய்,
நல்லதங்காளாய்
அல்லியாய் தோன்றி அன்புடன் எம்
தந்தையுடன் நடித்தீரே!
மண்ணுலகில் நடித்தது போதும் என்றெண்ணி
எம் தந்தையுடன் நடிக்க விண்ணுலகம்
விரைந்தீரோ!

அன்னாரின் மறைவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இசை நடிகமணி, கலாபூஷணம்.
அமரர் வி.என்.செல்வராஜா குடும்பத்தினர்.

துளசிவாசம், சண்டிலிப்பாய். (65319)

## முதலாம் வருட நினைவஞ்சலி

"உயிர் உள்ளவரை எம்மை நேசித்தீர்
மரணத்திலும் உம்மை நாம் மறவோம்"



மண்ணில் 07-03-1927 — விண்ணில் 01-01-2006

**திருமதி யோசேப்பு றோசேம்மா**

விண்ணுலகில் நீர் இறைவனோடு சேர்ந்து வாழ்ந்திட
மண்ணுலகில் நாம் இறைவனை இறைஞ்சுகின்றோம்.

இல.91, 3ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். (65245)

இவரின் பிரிவால் துயருறும்: பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதரர்கள், உறவினர்கள்.

## மரண அறிவித்தல்கள்

**திருமதி சண்முகம் தெய்வநாயகி (சிங்காரம்)**

உடுவிலைப் பிறப்பிடமாகவும் அம்மன் வீதி, பண்டத்தரிப்பையும் வவுனியாவையும் வதிவிடமாகக் கொண்ட திருமதி சண்முகம் தெய்வநாயகி வவுனியாவில் 30.12.2006இல் இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நாகலிங்கம் இரத்தினம் தம்பதியரின் மகளும் வல்லிபுரம் - சின்னப்பிள்ளை தம்பதியரின் மருமகளும் சண்முகத்தின் அன்பு மனைவியும் சிவநேசன், சுமதி, இந்துமதி ஆகியோரின் பாசமிகு தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (31.12.2006) ஞாயிறு முற்பகல் ஒரு மணிக்கு வவுனியா, தாண்டிக்குளம் இந்துமயானத்தில் நடைபெற்றன. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அம்மன் வீதி, பண்டத்தரிப்பு.
தகவல்: க.புவனேந்திரன் (ஜூா), பேரமக்கள். (சி/51739)

## ஜெயவரதராஜா ஐங்கரதாஸன்



வதிரி, பற்பை, கரவெட்டி வடக்கைப் பிறப்பிடமாகவும் தற்போது கொழும்பில் வசித்தவருமான ஜெயவரதராஜா ஐங்கரதாஸன் 27.12.2006 புதன்கிழமை கொழும்பில் அகாலமரணமடைந்தார்.

அன்னார் ம.ஜெயவரதராஜா(அதிபர், யா/ அல்வாய் வடக்கு றோ.க.) - செல்வபாக்கியம் (அம்பிகா) தம்பதியரின் அருமை மகனும் புருஷோத்மன் (ஆசிரியர், கல்கின்ன மத்திய கல்லூரி - கண்டி), காயத்திரி(யாழ். பல்கலைக்கழக விவசாயபீட மாணவி-இறுதியாண்டு), அபிராமி (யா/ வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி-2006 கலைப்பிரிவு மாணவி), உமைசுதன்(யா/நெல்லியடி ம.ம. வித்தியாலயம், தரம் 10 மாணவன்) ஆகியோரின் அருமைச் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அமரரின் வதிரி இல்லத்தில் இன்று(01.01.2007) திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் நடைபெற்று, அவரின் பூதவுடல் ஆலங்கட்டை இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். (சி/51738)

பற்றை வளவு, வதிரி, கரவெட்டி.
021 226 3933
தகவல்: ஜெயவரதராஜா குடும்பத்தினர்.

## ஈர விழிகளுடன் மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

**பாஸ்கரதேவன் ஜெயரஞ்சன்**



மலராக 23-04-1978 — சருகாக 05-01-2004

திதி: 01-01-2007

நேற்று நீ எம்முடன் - உறவாய்
இன்று நீ நினைவுடன் - படமாய்
நாளையும் எம் உள்ளத்தில் - உயிராய்
ஆண்டுகள் மூன்று கடந்திடினும் - எம்
இதயக் கோயிலில் வீற்றிருப்பாய் ராஜு
உன் நினைவை கனவைச் சுமந்து கண்ணீர்
பனிக்க துதிக்கின்றோம்.

ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

உடுவில் கிழக்கு, கற்பகப்பிள்ளையார் கோவிலடி, சுன்னாகம். (65388)

- குடும்பத்தினர்.

## 7 ஆம் ஆண்டு நீங்காத நினைவுச் சுடர்



திருமதி
**சந்திரன் அன்னலீலா (லீலா)**

மண்ணில் 27✱08✱1949 — விண்ணில் 23✱12✱2000


திதி: 01.01.2007

பாசத்தின் திருவுருவே! பண்பின் உறைவிடமே!
எம் குடும்பத்தின் அணையாத ஒளி விளக்கே!
எம்மை வளர்த்து ஆளாக்கி எங்கள் ஒவ்வொருவரதும்
இதயங்களில் குடியிருக்கும் அன்புத் தெய்வமே!
வாழ்க்கை என்ற நீண்ட பயணத்தில் ஏழு ஆண்டுகள்
ஆனாலும் உங்கள் நினைவுகள் எம் நெஞ்சைவிட்டு
மறையவே மறையாது!
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

தகவல்: சந்திரன் (கணவர்), நவாலி-அரசடி, மானிப்பாய். (65307)

உங்கள் பிரிவால் வாடும்: கணவர், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## ஓராண்டு நினைவலைகள்



மலர்வு 24-06-1946 — உதிர்வு 12-01-2006


**அமரர் சின்னத்தம்பி நடராசா**
(ஓய்வுபெற்ற சிறைச்சாலை உத்தியோகத்தர் - யாழ்ப்பாணம்)

பார் போற்ற வாழ்ந்து - இன்று பலபேர் நினைவில் வாழ்பவரே!
ஓராண்டென்ன ஒரு நூறு ஆண்டுகளாயினும் - உங்கள்
நினைவுகளை எம்மால் மறக்க முடியாது
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை இறைஞ்சுகின்றோம்.
ஓம் சாந்தி!

கச்சாய் வீதி, கொடிகாமம். (65307)

- குடும்பத்தினர்.

## ஈர விழிகளுடன் ஆண்டு நான்கு



அமரர்
**முருகப்பா பழனியப்பன்**

(இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபன முகவரும் தமிழரசுக் கட்சியின் ஆரம்ப கால உறுப்பினரும், தமிழர் விடுதலைக் கூட்டணியின் மூத்த உறுப்பினரும், நல்லூர் பிரதேசசபையின் முன்னாள் உபதலைவரும், நல்லூர் மக்கள் சனசமூக நிலையத்தின் போசகரும், அன்னியசிங்கம் மன்றத்தின் ஸ்தாபகரும்)

தோற்றம் 19-01-1935 — மறைவு 01-01-2003

அண்ணாவின் பாதையிலே
அடியெடுத்த அப்பாவே
கண்ணீரில் மிதந் தின்று
குமுறிடுமே எம் பாவே
ஆழ்கடலில் துரும் பாகி
அலறிடுமே எம் நெஞ்சு
ஏழ் பிறப்பும் உங்களுக்கே
எக்கமுடன் நாமிருப்போம்

தப்பாமல் இப்பாரில்
தலை நிமிர்ந்து நாம் வாழ
அப்பாவின் அர்ப்பணிப்போ
எல்லையிலை ஏராளம்
ஆண்டொன்று கடந்தாலும்
அணையாது எம் சோகம்
மீண்டெழுமே நாளும்
பழனியப்பா எனும் நாமம்.

543, ஆடியபாதம் வீதி, நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம். (65080)

- குடும்பத்தினர்.

## மரண அறிவித்தலும் 31 ஆம் நாள் நினைவஞ்சலியும்



**அமரர் பூதத்தம்பி வேலாயுதர்**

நீர்வேலியைச் சேர்ந்தவரும் இடைக்காட்டை வசிப்பிடமாகக் கொண்டவரும் நூலகராக (அரசாங்கப் பகுப்பாய்வுத் திணைக்களம் - கொழும்பு) இருந்து ஓய்வுபெற்றவருமாகிய பூதத்தம்பி வேலாயுதர் 02.12.2006 அன்று இறைபதமடைந்தார். அன்னாரின் இறுதி நிகழ்வுகள் 03.12.2006 அன்று இடைக்காட்டில் நடைபெற்றன. அன்னார் காலஞ்சென்றவர்களான பூதத்தம்பி - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான வெற்றிவேலு - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் மருமகனும் கண்மணியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற சுப்பிரமணியத்தின் அன்புச் சகோதரரும் அரசகேசரி (முருகானந்த ம.வி. முரசுமோட்டை), சுசீலா (கனடா), அகிலராணி ஆகியோரின் அன்புத் தந்தையும் நந்தகுமார் (கனடா), ஜெயகாந்தன் ஆகியோரின் மாமனும் தேமதுரி (கனடா), கஜன் (கனடா), அருவி, முகிலன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று(01.01.2007) திங்கட்கிழமை நண்பகல் அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளன. ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அழைக்கின்றோம். (65030)

இடைக்காடு, அச்சுவேலி. குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

உதயன்

தொலைபேசி, தொலைநகல்: 222 9933, 222 3837 - 222 9944

## போர் மேகம் சூழ்வதால் பொருளாதாரமும் பாதிப்பு

ஆங்கிலப் புத்தாண்டு இன்று பிறக்கின்றது.

பழையன கழிதலும், புதியன புகுதலும் இயற்கையின் நியதி. அதன் வழி 2006 கழிய, 2007 இல் பூமிப் பந்து காலடி எடுத்து வைக்கின்றது.

புதிய வருடப் பிறப்புடன் புது வாழ்வு கிட்டுமா என்று ஏங்குவது மனித இயல்பு. அதுவும் அவலத்திலும், அபத்தத்திலும் சிக்கி அந்தரப் பட்டு, அர்த்தம் இழந்து நிற்கும் இலங்கைத் தீவு, புத்தாண்டிலாவது போர் மேகம் கலைந்து, அமைதித் தென்றல் வீசாதா என்று ஏங்கி நிற்பது புரிந்துகொள்ளத் தக்கது.

ஒருபுறம் சமாதான முயற்சிகள் கானல் நீராகிக் கலைந்து போகும் அவலநிலை. மறுபுறம், போர்ச் சூழல் கவிந்து, பொருளாதாரம் சீர்குலைந்து, வாழ்வுக்கு அல்லாடும் கையறு நிலை.

திசை தெரியாது, போக்கிடம் புரியாது தடுமாறுகிறது இலங்கைத் தீவு.

அதிலும், போக்குவரத்துகள் துண்டிக்கப்பட்டு, விநியோக மார்க்கம் தடைப்பட்டு, மனிதப் பேரவலத்தை எதிர்கொண்டு நிற்கும் யாழ். குடாநாட்டு மக்களினதும், வாகரைப் பிரதேசத் தமிழர்களினதும் நிலையோ சொல்லுந்தரமன்று.

யுத்தக் கொடூரமும், பேரிழப்பும் எங்கும் சூழ்ந்து நிற்க, படுகொலைகளும், ஆட்கடத்தல்களும், அச்சுறுத்தல்களும் என வன்முறைகள் கட்டுமீறி காட்டுத் தர்பார் தொடர, வாழ்வின் அர்த்தமிழந்து, சூனியத்தை - வெறுமையை - எதிர்நோக்கி, சலித்துப் போய் நிற்கிறது இலங்கை சமூகம்.

போர்க் கொடூரம் குறித்து இப்பத்தியில் விவரித்துக் களைத்தாயிற்று. போர்ச் சீரழிவின் விளைவாகப் பொருளாதாரப் பேரழிவை இலங்கைத் தீவு எதிர்கொள்வது இப்போது அம்பலத்துக்கு வந்திருக் கின்றது.

போர் விளிம்பில் தடுமாறும் இலங்கையின் பொருளாதாரம் மிகமிக மோசமான கட்டத்தை நோக்கி நகர்ந்து கொண்டிருப்பதாக நிபுணர்கள் எச்சரித்திருக்கின்றனர்.

கடந்து சென்ற வருடத்தின் நான்காவது காலாண்டில் பொருளாதார வளர்ச்சி வீதம், எதிர்பார்த்த விருத்தியை அடையாமல் வீழ்ச்சியடைந்திருப்பதை இலங்கை மத்திய வங்கியே ஒப்புக்கொண்டிருக் கின்றது.

போர் நெருக்கடியால் நாட்டின் பிரதான வருவாய் மூலமான சுற்றுலாத்துறை மோசமாகப் பாதிக்கப்பட்டிருக்கின்றது. வெளிநாட்டு வர்த்தகமும் சீரழிந்து வருகின்றது.

போதாக் குறைக்குப் பாதுகாப்புச் செலவினத்துக்கான கட்டுமட்டில்லாத நிதி ஒதுக்கீடு காரணமாக நாடு, சர்வதேசக் கடனாளியாகி அந்தரிக்கின்றது.

நிதி நெருக்கடியைச் சமாளிப்பதற்கு புதிய பண நோட்டுகளை அச்சிட்டுப் புழக்கத்துக்கு விடும் அரசின் குறுக்கு வழிப் புத்தியால் - பொருத்தமற்ற பொருளாதாரக் கொள்கையால் - பணவீக்கம் எல்லை மீறுகின்றது. வட்டி வீதத்தை, கட்டுப்பாட்டைத் தாண்டி அவ்வப்போது அதிகரிக்க வேண்டிய கட்டாயம் மத்திய வங்கிக்கு.

பண வீக்கத்தால் வாழ்க்கைச் செலவு எகிற, நாட்டின் மத்திய மற்றும் கீழ்த்தட்டு வர்க்கத்தினர் ஒருவேளைக் கஞ்சிக்கே அல்லாடும் அவல நிலை நெருங்கி வருகின்றது. வாழ்க்கைச் செலவுப் புள்ளி வீதம் முனனெப்போதும் இல்லாத சாதனை அதிகரிப்பை - உச்சப் பாய்ச்சலை - தொட்டு நிற்பதாக புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

இந்தப் பிராந்தியத்தில் பொதுவான சராசரிப் பணவீக்க வீதம் ஐந்தாக இருக்கையில், இலங்கையில் மட்டும் அது நான்கு மடங்காக - இருபது வீதமாக - உயர்ந்திருக்கின்றது.

வெளிநாட்டு நாணயங்களுக்கு எதிராக இலங்கை ரூபாவின் பெறுமதி மோசமாக வீழ்ச்சி கண்டு வர, நிலைமையைச் சமாளிப்ப தற்காகக் குறுகிய காலத் தற்காலிகக் கடன்களைப் பெற்றுக்கொள்ளும் நிலைக்கு அரசு தள்ளப்பட்டிருக்கின்றது.

நேற்றுடன் கழிந்த 2006 இல் இந்த அரசு பெற்றுக் கொண்ட குறுகிய கால - தற்காலிக - கடன் தொகையின் அளவு 22 ஆயிரத்து 300 கோடி ரூபா என்ற அதிர்ச்சித் தகவலும் வெளியாகியிருக்கின்றது.

இத்தகைய கட்டுக்கடங்காத - மிக மோசமான - மீளவே முடியாத - பொருண்மிய நிலைமையை நோக்கி வீழ்ச்சியுறும் கட்டத்துக்கு நாடு தள்ளப்பட்டிருப்பதற்குக் காரணம், பொருத்தமான பொருளாதாரக் கொள்கை அரசிடம் இல்லை என்பது மட்டுமல்ல, பொருளாதார மீட்சி நிலைக்கு நாட்டை இட்டுச் செல்லும் சுபீட்சமான திட்டமும், நோக்கமும், தெளிவான தூரதிருஷ்டியும், அரசியல் பார்வையும் அரசுத் தலைமையிடம் இல்லை என்பதும் கூட அடிப்படையாகும்.

பௌத்த-சிங்களப் பேரினவாதப் போக்கும், மேலாண்மைத் திமிரும் கொண்ட தென்னிலங்கைச் சமூகத்தின் ஒரு பகுதியினரைத் திருப்திப்படுத்தும் நோக்கில், தமிழர்களின் தேசிய இனப்பிரச்சினை விவகாரத்தைப் போர்வெறிப் போக்கோடு அணுகுகின்றது இந்த அரசுத் தலைமை.

இந்தப் பக்கச் சார்பான - தூரநோக்கற்ற - அமைதித் தீர்வுக்கு சாத்தியப்படாத - அரசியல் மிடுக்குத்தனம் இலங்கைத் தீவு முழுவதையும் யுத்த பீதிக்குள் ஆழ்த்த, அதன் விளைவாக நாட்டின் பொருளாதாரம் அதல பாதாளத்துக்குள் விழும் அவலம் உருவாகி இருக்கின்றது.

எந்நேரமும் வெடிக்கக் கூடிய கொடூரப் போர், சிறுபான்மையினரான தமிழரின் தாயகத்தை மட்டும் பேரவலத்துக்குள் ஆழ்த்தும் என்பது அல்ல. போரின் கொடூரமும், பொருளாதார நெருக்குதலும் தென்னிலங்கையையும் எண்ணிப்பார்க்க முடியாத பின்னடைவுக்குள்ளும் - சமூகப் பாதிப்புக்குள்ளும் - வீழ்த்தும் என்பதை தென்னிலங்கைத் தலைமைகள் உணர்ந்து கொள்வது நல்லது. அது எப்போது நடக்கும்?

## அறிக்கைகளை விடுவதால் மட்டும் எவ்வித பயனும் இல்லை இந்தியா முன்முயற்சியுடன் தலையிட்டுச் செயற்படவேண்டும்

### கூட்டமைப்பு எம்.பி. பிரேமச்சந்திரன்



புதுடில்லி,ஜன.1

இலங்கையில் சீர்குலைந்துபோய்க் கொண்டிருக்கும் அமைதிச் செயற்பாடுகளை மீண்டும் உயிர்பெறச் செய்வதில் இந்தியா முன் முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும். அவ்வாறு செய்யின் முழு உலகமும் அதன் பின்னால் அணி வகுக்கும்.

இவ்வாறு கருத்துத் தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தூதுக் குழுவின் அங்கத்தவர்களில் ஒருவரான சுரேஷ் பிரேமச்சந்திரன்.

இலங்கைத் தீவில் சீர்குலைந்து போய்க்கொண்டிருக்கும் நிலைமைகள் குறித்து வெறுமனே அறிக்கைகளை விடுத்துக்கொண்டிருப்பதானது சர்வதேச விடயங்களில் அதிக அளவில் அக்கறை காட்டிக்கொள்ளவிரும்பும் இந்தியா போன்ற நாடுகளுக்கு அழகல்ல - என்றும் அவர் தெரிவித்தார்.

பெரிதாக வாயளவில் பேசிக்கொண்டிருப்பதில் பயனில்லை. இந்தியா வல்லரசு அந்தஸ்துக்கு உயர விரும்புமானால் ஐ.நா. பாதுகாப்புச் சபையில் நிரந்தர உறுப்புரிமையைப் பெற்றுக்கொள்ள விரும்புமானால் இலங்கையில் ஒன்றுமறியாத அப்பாவி மக்கள் அனுதினம் கொல்லப்பட்டுக்கொண்டிருப்பதை அனுமதித்துக்கொண்டிருக்கலாமா என்றும் அவர் கேட்டார்.

பெங்களூரில் ஆன்மீகக் குரு ஸ்ரீஸ்ரீ ரவிசங்கரைச் சந்திக்க சென்றிருந்த வேளையில் பிரேமச்சந்திரன் புதுடில்லியிலுள்ள ஐ.ஏ.என்.எஸ். நிருபருடன் தொலைபேசியில் உரையாடினார்.

இந்தியா, இலங்கை விடயத்தில் முன் முயற்சி எடுத்து செயற்படவேண்டிய காலம் உருவாகியுள்ளது. இந்தியாவை முழு உலகுமே பின்பற்றக் கூடும். கடந்த மூன்று மாதகாலமாக இலங்கைக்கு உணவுப்பொருள்கள் அனுப்பப்போவதாக இந்தியா கூறி வந்துள்ளது. ஆனால் அதுவும் கூட நடைபெறவில்லை - என்றார் பிரேமச்சந்திரன்.

இலங்கையில் வடக்கு - கிழக்கு மாகாணத்தை இரண்டாகப் பிரிப்பதற்கு இலங்கை அரசு தீர்மானித்திருப்பது பற்றிக் குறிப்பிட்ட பிரேமச்சந்திரன், தமிழ்நாட்டின் வடக்கு தெற்கு பகுதிகள் இரண்டு மாநிலங்காளாகப் பிரிக்கப்பட்டால் தமிழ்நாடு அதனை எவ்வாறு ஏற்றுக்கொள்ளும் என்று பிரேமச்சந்திரன் கேட்டார்.

இலங்கையின் வடக்கு - கிழக்கு மாகாணத்தை அரசாங்கம் இரண்டாகப் பிரிப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளமை குறித்துத் தாம் ரவிசங்கர் குருஜியின் கவனத்திற்குக் கொண்டு வந்திருப்பதாக அவர் தெரிவித்தார்.

இந்தியா மற்றும் சர்வதேச நாடுகள் அதிருப்தி தெரிவித்திருந்த போதிலும் இலங்கை அரசு வடக்கையும் கிழக்கையும் இரண்டாகப் பிரித்து விட்டது.

இவை பிரிக்கப்பட்டதால் கிழக்கில் தமிழ் மக்களின் பலமும் செல்வாக்கும் குறைக்கப்பட்டுவிடும் என்று தமிழர் தரப்பில் அச்சம் நிலவுவது குறிப்பிடத் தக்கது. (ப)

## யாழ். பொலிஸ் நிலையங்களில் பால்மா, சவர்க்காரம் விற்பனை

யாழ்ப்பாணம்,ஜன. 01

யாழ். குடாநாட்டு மக்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருள்கள் இங்குள்ள பொலிஸ் நிலையங்கள் ஊடாகவும் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

குடாநாட்டில் இயங்கும் எட்டு பொலிஸ் நிலையங்களில் வைத்து இந்த அத்தியாவசியப் பொருள்கள் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

பால்மா பைக்கற், சவர்க்கார வகைகள் மற்றும் நுளம்புச்சுருள் பெட்டிகள் போன்ற பொருள்கள் சற்று விலை அதிகமாக விற்கப்படுகின்றன.

எனினும், ஏனைய பொருள்கள் சாதாரண விலைக்கே விற்பனை செய்யப்படுவதாக யாழ். மாவட்ட உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் எரிக் பெரேரா தெரிவித்துள்ளார். அத்தியாவசியப் பொருள்களை விலைகொடுத்து வாங்குவதற்காக பொதுமக்கள் பொலிஸ் நிலையங்களில் குவிந்து நிற்பதாகவும் அவர் குறிப்பிட்டார். இதேவேளை, இராணுவ முகாம்களிலும் அத்தியாவசியப் பொருட்கள் விற்பனை செய்யப்பட்டுவருகின்றன. (ஐ - 3)

## நாட்டில் அமைதிவேண்டி நயினாதீவில் விசேட பூசை

யாழ்ப்பாணம்,ஜன.1

புத்தாண்டில் நாட்டில் அமைதியும் சுபீட்சமும் வேண்டி இன்று நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலயத்தில் விசேட 108 சங்காபிஷேக பூசையும் திருவாசக முற்றோதலும் இடம்பெறவுள்ளன.

## தொழில்நுட்பக் கல்லூரி மாணவர் கவனத்துக்கு

யாழ்ப்பாணம்,ஜன.1

யாழ்.உயர் தொழில்நுட்பவியல் நிறுவனத்தில் எச்.என்.டி.ஏ. பகுதிநேரக் கற்கைநெறிக்குத் தெரிவுசெய்யப்பட்ட மாணவர்கள் தமது பெயர்ப்பட்டியலை நிறுவன விளம்பரப் பலகையில் பார்வையிடலாம் என்று நிறுவனத்தினர் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் அனுமதிக்கடிதங்களை அலுவலக நேரத்தில் பார்வையிட்டு உரிய திகதியில் மாணவர்கள் பதிவுகளை மேற்கொள்ள வேண்டுமென்றும் தெவிக்கப்பட்டுள்ளது. (203)

## மண் எண்ணெய் விநியோகம்

யாழ்ப்பாணம்,ஜன.1

இருபாலை ஏ.எம்.ரி.ராஸ்போட் சேவிஸ் நிலையத்தில் இன்றுமுதல் மண் எண்ணெய் விநியோகம் செய்யப் படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிராம சேவகர் பிரிவுகளான ஜே/257, ஜே/258, ஜே/259, ஜே/260 ஆகியவற்றைச் சேர்ந்த பங்கீட்டு அட்டைகளுக்கே மண்எண்ணெய் வழங்கப் படவுள்ளது. (203)

## நாளை

மார்கழி 18
செவ்வாய்க்கிழமை
02.01.2007
திதி : சதுர்த்தசி
முன்னிரவு 8.55
நட்சத்திரம் : மிருகசீரிடம்
முன்னிரவு 10.29
சுபநேரம் : 11.00 - 12.30
ராகுகாலம் : 03.30 - 05.00

## கல்பதரு தினம்

யாழ்ப்பாணம்,ஜன.1

தாவடி,கொக்குவில் ஸ்ரீ ராம கிருஷ்ண சேவாச்சிரமம் நடத்தும் கல்பதரு தினம் இன்று திங்கட்கிழமை மாலை 4.30 மணிக்குத் தாவடி இ.த.க. பாட சாலை பழைய கட்டடத்தில் நடைபெறவுள்ளது. (203)

## திருவாசக முற்றோதல்

சுழிபுரம்,ஜன.1

பண்ணாகம் ஆலடி வைரவப் பெருமான் ஆலயத்தில் சிவதொண்டர் குழுவினரால் திருவாசகம் முற்றும் ஓதுதல் இன்று திங்கட்கிழமை முற்பகல் 10 மணி முதல் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

வைரவப் பெருமானுக்கு நடைபெறும் விசேட பூசையைத் தொடர்ந்து முற்றோதல் ஆரம்பமாகும் இவ்வாலயத்தில் வருடம்தோறும் தவறாது இப்படிப்பு நடைபெற்றுவருவது வழமை. (203-28)

## தைப்பூரணை விழா

யாழ்ப்பாணம்,ஜன.1

தாவடி கொக்குவில் ஸ்ரீராம கிருஷ்ண சேவாச்சிரமம் நடத்தும் தைப்பூரணை விழா நாளைமறுதினம் புதன்கிழமை காலை 9.30 மணிக்கு தாவடி இ.த.க. பாடசாலை பழைய கட்டடத்தில் நடைபெறவுள்ளது. (203)

## ஹஜ்பெருநாள் தொழுகை

யாழ்ப்பாணம்,ஜன.1

புனித ஹஜ்ஜுப் பெருநாளை முன்னிட்டு நேற்றுக்காலை இல. 145, மானிப்பாய் வீதி, பெரிய மொஹிடீன் ஜும்ஆ பள்ளிவாசலில் மௌலவி இர் பான் தலைமையில் பெருநாள் தொழுகையும் மறைந்த முன்னாள் ஈராக் ஜனாதிபதி சதாம் ஹுசைனின் ஜனாஸா தொழுகையும் பிரார்த்தனையும் நடைபெற்றன.

பள்ளிவாசல் நிர்வாகி பி.எஸ்.எம். சரபுல் அனாம், எம்.ஆர்.எம்.ஜிப்ரீல், ஏ.ஆர்.சுகூர் ஆகியோர் இந்நிகழ்வை நடத்திவைத்தனர். (203)

## ஈழத்துச் சிதம்பர பஞ்சரத பவனி வானொலியில் நேரடி அஞ்சல்

யாழ்ப்பாணம்,ஜன.1

கரைநகர் ஈழத்துச் சிதம்பரத்தில் நாளை நடைபெறும் பஞ்சரத பவனி மற்றும் நிகழ்வுகள் வானொலியில் நேரடி அஞ்சல் செய்யப்படவிருக்கின்றன.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் மற்றும் சக்தி எவ்.எம். ஆகிய வானொலிகள் ஊடாக நேரடி அஞ்சல் செய்ய ஏற்பாடாகியுள்ளது.

அதேவேளை -

பஞ்சரதபவனியின்போது குடாநாட்டைச் சேர்ந்த நூற்றுக்கும் மேற்பட்ட கலைஞர்களின் இசை நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. (1-203)

## பருத்தித்துறையில் விபத்து; மாணவன் மரணம்

யாழ்ப்பாணம்,ஜன.1

பருத்தித்துறை சாரையடியில் நேற்று முற்பகல் 11 மணியளவில் இடம்பெற்ற ஹன்டர் - சைக்கிள் விபத்தில் பாடசாலை மாணவர் ஒருவர் பலியானார்.

அதேயிடத்தைச் சேர்ந்த சஞ்ஜென் சிறிதரன்(வயது 8) என்னும் புற்றளை மாகாவித்தியாலய மாணவனே பலியானவர் ஆவார்.

தனது வீட்டிலிருந்து சைக்கிளில் புறப்பட்ட சிறுவன் பிரதான வீதியில் பயணிக்கும்போதே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

வாகனத்தின் சாரதியைப் பருத்தித்துறைப் பொலீஸார் கைதுசெய்ததுடன், வாகனத்தையும் கைப்பற்றினர்.

சிறுவனின் சடலம் பருத்தித்துறை வைத்தியசாலையில் பிரேத பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது.

(1-115-173)

## மேலும் 5 இளைஞர்களைக் காணவில்லை என்று முறைப்பாடு

யாழ்ப்பாணம்,ஜன.1

குடாநாட்டில் மேலும் ஐந்து இளைஞர்கள் காணாமற்போயுள்ளதாக அவர்களது உறவினர்களால் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சோதிலிங்கம் ஜனார்த்தனன் (வயது 23) என்பவரைக் கடந்த வெள்ளிக்கிழமை தொடக்கம் காணவில்லை எனவும் -

அத்துடன், யாழ். நாச்சிமார்கோயிலடியைச் சேர்ந்த பெருமாள் பிரசாந் (வயது22) என்பவரை அவரது வீட்டுக்குச் சென்ற இனந்தெரியாத ஆயுததாரிகள் கடத்திச் சென்றதாகவும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை -

வடமராட்சி துன்னாலையைச் சேர்ந்த குடும்பஸ்தர்களான கந்தசாமி சுந்தரராசா(வயது 39), அதேயிடத்தைச் சேர்ந்த வெற்றிவேலு ஜெயபாலன் (வயது 42) ஆகியோரைக் கடந்த மாதம் 26ஆம் திகதி முதலும் வல்வெட்டித்துறையைச் சேர்ந்த அண்ணாமலை அன்பரசன்(வயது 30) என்பவரைக் கடந்த மாதம் 24ஆம் திகதி முதலும் காணாமற்போயுள்ளதாக முறையிடப்பட்டுள்ளது. (203-79)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிறக்கும் புத்தாண்டில் சமாதானத்தை நோக்கி பயணிப்பதே இருகட்சிகளினதும் பொறுப்பு

## புதுவருடச் செய்தியில் ரணில் தெரிவிப்பு



கொழும்பு,ஜன.01

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும்வகையில் இரு பிரதான கட்சிகளும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ள நிலையில் புதுவருடத்தில் காலடி எடுத்து வைக்கின்றோம். புதுவருடத்தில் அரசியல் தீர்வுக்காக ஆலோசனைகளை முன்வைத்து நிரந்தர சமாதானத்தை நோக்கிய பயணத்தை முன்னெடுப்பதே இரு பிரதான கட்சிகளினதும் பொறுப்பாகும்.

ஐ.தே.கட்சித் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க விடுத்துள்ள புத்தாண்டுச் செய்தியில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவரது செய்தியில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:-

சமாதானப் பயணத்தை சீர்குலைக்காமல் அதற்கு ஆதரவளிப்பது நாட்டினதும் இனத்தினதும் எதிர்காலத்தை வளமாக்கிக்கொள்ளப் பாடுபடும் அனைவரினதும் கடமையாகும்.

ஐக்கிய தேசியக் கட்சியினரான நாம் நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்துவதைப் போலவே எமது கட்சியையும் மறு சீரமைக்கும் பணிகளிலும் புதுவருடத்தில் ஈடுபடவுள்ளோம். (ஐ)

# சுமார் ஆயிரம் கோடி ரூபாவுக்கு பாகிஸ்தானிடமிருந்து ஆயுதங்கள்

கொழும்பு, ஜன. 1

இலங்கை அரசு பாகிஸ்தானிடமிருந்து சுமார் 1,000 கோடி ரூபா பெறுமதிவாய்ந்த ஆயுதங்களைக் கொள்வனவு செய்யத் தீர்மானித்துள்ளதாகவும் இதற்கான கட்டளைகளைப் பாகிஸ்தானிடம் சமர்ப்பித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

புலிகளுக்கெதிரான தாக்குதல் நடவடிக்கைகளை அரசு முன்னெடுத்துச் செல்லும் இச்சந்தர்ப்பத்தில் அரசிடம் பல வகையான ஆயுதங்கள் தட்டுப்பாடாகவுள்ளன என்றும் அவற்றை நிவர்த்திசெய்வதற்காகவே இவ்வாயுதக் கொள்வனவு மேற்கொள்ளப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த ஆயுதங்களில் பெரும்பாலானவை கொள்வனவு செய்யப்பட்டுவிட்டன என்றும் கொள்வனவு செய்யப்பட்ட சில வகையான வெடிகுண்டுகள் மற்றும் ஆயுதப் பாகங்கள் [illegible] டைந்தவையாகக் காணப்பட்ட[illegible] என்றும் அவற்றை மீள எடுத்துக்கொள்ள பாகிஸ்தான் விருப்பம் தெரிவித்துள்ளது என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஐ)

## சதாம் ஹுசைன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமது சோகத்தை வெளிப்படுத்தினர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

ஹஜ் பெருநாள் தொழுகையை அடுத்து சதாம் ஹுசைனுக்காக ஜனாஸாத் தொழுகையும் நடத்தப்பட்டதுடன், அவரது ஆத்ம ஈடேற்றத்துக்கான விசேட பிரார்த்தனைகளும் இடம் பெற்றன.

கிழக்கில் மட்டக்களப்பு, அம்பாறை மற்றும் திருமலை மாவட்ட முஸ்லிம் பள்ளிவாசல்களிலும் ஜனாஸாத் தொழுகை நடத்தப்பட்டது. பெருமளவான மக்கள் இதில் கலந்து கொண்டனர்.

சதாம் ஹுசைன் ஈராக்கின் ஜனாதிபதியாகப் பதவி வகித்தபோது கடந்த 1982 ஆம் ஆண்டு ஏறாவூரில் அமைக்கப்பட்ட சதாம் ஹுசைன் கிராமத்திலும் விசேட ஜனாஸாத் தொழுகை நடத்தப்பட்டது.

மஸ்ஜிதுல் பக்தாத் ஜும் ஆப்பள்ளிவாசலில் மறைந்த சதாம் ஹுசைன் நினைவாக விசேட இரங்கல் சொற்பொழிவும், பிரார்த்தனையும் இடம் பெற்றது.

சதாம் ஹுசைனின் நிதியுதவியுடன் ஏறாவூரில் 100 வீடுகள், பள்ளிவாசல் மற்றும் அரபு மத்றஸா என்பவற்றைக் கொண்டதாக சதாம் ஹுசைன் கிராமம் அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

சதாம் தூக்கிலிடப்பட்டமையைப் பல அரசியல் கட்சிகளும் சிவில் அமைப்புகளும் வன்மையாகக் கண்டித்துள்ளன. மரணதண்டனைக்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள், ஹர்த்தால், கடையடைப்பு போன்ற போராட்டங்களை நாடுமுழுவதும் முன்னெடுக்கவும் தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன. இவ்வாரம் இந்த ஆர்ப்பாட்டங்களை நடத்த முஸ்லிம் அமைப்புகள் தீர்மானித்துள்ளன. (ஐ)

## வடக்குக்கான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வடக்கு மாகாண ஆளுநர் பதவிக்காகப் பலர் போட்டி போட்டுக் கொண்டிருக்கின்றனர். அவர்களுள் ஒருவர் முன்னாள் பொலிஸ் மாஅதிபர் சந்திரா பெர்னாண்டோ. இவரையே வடக்கின் ஆளுநராக நியமிக்குமாறு ஜனாதிபதிக்கு வேண்டியவர்கள் ஜனாதிபதியிடம் சிபார்சு செய்திருக்கின்றனர் என்றும் அதனடிப்படையில் சந்திரா பெர்னாண்டோவை வடக்கின் ஆளுநராக நியமிக்க ஜனாதிபதி தீர்மானித்துள்ளார் என்றும் நம்பகமான வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை -

கிழக்கின் ஆளுநர் மொஹான் விஜய விக்கிரம, வடக்கு - கிழக்கு இணைக்கப்பட்டமை சட்டவிரோதம் என்ற நீதிமன்றத் தீர்ப்பை மதித்து நடக்குமாறு கிழக்கிலுள்ள அரச ஊழியர்களுக்குக் கூறியுள்ளார்.

### தேசிய கீதத்துடன் பணிகளை ஆரம்பிக்க உத்தரவு

இன்று ஜனவரி முதலாம் திகதியிலிருந்து வடக்கு - கிழக்கு தனித் தனி மாகாணங்களாக இயங்கும் வண்ணம் கிழக்கிலுள்ள அனைத்து அரச நிறுவனங்களும் காலை 8.15 மணிக்குத் தேசிய கீதத்தைத் தொடர்ந்து தமது பணியை ஆரம்பிக்க வேண்டும் என்றும் ஆளுநர் உத்தரவிட்டுள்ளார் எனத் தெரியவருகிறது.

இதேவேளை -

வடக்கு - கிழக்கின் பிரதம செயலாளராக நியமிக்கப்பட்ட ஏ.ரங்கராஜா, தற்போது வடக்கிற்கு மட்டும் பிரதம செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார். கிழக்கின் பிரதம செயலாளராக முஸ்லிம் ஒருவர் நியமிக்கப்படவுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

கிழக்கின் நிர்வாக வேலைகளை திருகோணமலையில் முன்னெடுக்க அரசு முனைகின்ற இந்த வேளையில், கல்முனையே கிழக்கின் நிர்வாக மாவட்டமாக மாற்றப்பட வேண்டும் என சில முஸ்லிம் கட்சிகள் வேண்டுகோள் விடுத்து வருகின்றன என்றும் கூறப்படுகின்றது. (ஐ)

# கற்பிட்டி கடற்பரப்பில் தென்பட்ட மர்மப் படகு

## மீனவர்கள் தகவல், பொலிஸார் விசாரணை

சிலாபம், ஜன.1

சிலாபம் - கற்பிட்டிக்கடற்பரப்பில் மர்மமான முறையில் தரித்து நின்ற மீன்பிடிப் படகு தொடர்பான விசாரணை, பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. குறிப்பிட்ட பிரதேச மீனவர்கள் நேற்றுமுன்தினம் இரவு இந்த மர்மப் படகை அவதானித்து அதுபற்றிய தகவலைத் தெரிவித்துள்ளனர். இந்த மீன் பிடிப்படகில் வருகை தந்தவர்கள் எனக் கூறப்படும் 7 பேர், கற்பிட்டிப் பிரதேச மீனவர்களிடம் தமது படகுக்குத் தேவையான எரிபொருள்களைக் கேட்டனர் என்றும், எரிபொருள் இல்லையெனத் தெரிவித்ததையடுத்து, ''வேறு எங்கு எரிபொருள்களைப் பெறலாம்?'' என்று விசாரித்தனர் எனவும் மீனவர்கள் கூறுகின்றனர்.

மர்மப் படகு தொடர்பான விசாரணையைப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். நேற்று முன்தினம் இரவு 11 மணியளவில் கடலில் இக்கப்பல் தோன்றியதாகவும், அதன் பின்னர் அந்தக் கப்பலைக் காணவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## அமைதிப் பேச்சை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரீதியாக இலங்கையின் சமாதான விடயத்தில் இலங்கையுடன் நெருங்கி நிற்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அமைச்சர் வீக்சோரெஜ் செவுல் அண்மையில் வெளியிட்ட அறிக்கைகள், இதனைத் தெளிவுபடுத்துகின்றன. ஜேர்மனியால் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ஐரோப்பிய ஒன்றியம், சமாதான முயற்சிக்கு ஊக்கம் கொடுக்கும் முயற்சிகளை இரு மடங்குகளாக்கத் திட்டமிட்டுள்ளது என அவ்வறிக்கைகளில் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

ஏனைய சர்வதேச உதவி வழங்கும் நாடுகளும் இந்த விடயத்தில் தம்மைப் பின்பற்ற வேண்டும் என அண்மையில் ஜேர்மனியிலுள்ள பத்திரிகை ஒன்றுக்கு வழங்கிய பேட்டியில் அமைச்சர் வீக் சோரெஜ் செவுல் குறிப்பிட்டுள்ளார் என அவரின் பேச்சாளர் கூறியுள்ளார்.

### வன்முறைகள் அதிகரிப்பும் நிதி உதவியும்

யுத்தத்தில் ஈடுபட்டுள்ளவர்களைப் பேச்சு மேசைக்குக் கொண்டு வரும் திட்டத்தில் ஒன்றாகவே இது இருக்கிறது என்றும் அப்பேச்சாளர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் வடக்கு - கிழக்கில் ஏற்பட்டுள்ள அதிகரித்த வன்முறையானது அப்பகுதிகளில் அபிவிருத்தி நடவடிக்கைகளைப் பாதித்துள்ளது. இந்த நிலையில் அபிவிருத்திக்கான நிதியுதவிகளை வழங்குவதில் அர்த்தமில்லை என்றும் அப்பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இலங்கையின் வடக்கு - கிழக்குப் பகுதியில் மீள்கட்டுமானப் பணிகளை மேற்கொள்வதற்கும், வறுமையைக் குறைப்பதற்கும் இலங்கைக்கு ஜேர்மனி எதிர்காலத்தில் வழங்கவிருக்கும் நிதித் திட்டத்தையும் அமைச்சர் வீக்சோரெஜ் செவுல் மறுசீரமைப்புச் செய்து வருகிறார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுழற்சி முறையிலான ஐரோப்பிய ஒன்றியத்தின் ஆறு மாத கால தலைமைத்துவப் பதவியைக் கொண்டிருக்கும் ஜேர்மனி, ஐரோப்பிய ஒன்றியத்தால் ஏற்கனவே புலிகள் மீது விதிக்கப்பட்ட தடையை பரிசீலனை செய்யும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

புலிகள் மீதான இத்தடை காரணமாக அனேகமான சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள் பாதிக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது. இலங்கையில் செயற்படும் சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள், ஜேர்மன் அமைச்சர் வீக்சோரெஜ் செவுலுக்குத் தாம் இத்தடை மூலம் அனுபவிக்கும் கஷ்டங்கள் பற்றி விளக்கியுள்ளன.

இலங்கையில் இயங்குகின்ற ஜேர்மனிய சர்வதேச அரச சார்பற்ற நிறுவனமான 'மெடிகோ இன்டர்நெஷனல்' இன் பேச்சாளர் ஒருவர், இத்தடை ஒரு பக்கத்தைச் சார்ந்ததாக இருப்பதால் இது பிரச்சினையைத் தோற்றுவித்திருப்பதாகவும் இலங்கையின் தேசியப் பிரச்சினையைத் தீர்க்க இது வழியில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

புலிகள் மீதான ஐரோப்பிய ஒன்றியத்தின் தடையை நீக்குவதற்கு ஐரோப்பிய அரசுகளுக்கு அழுத்தம் கொடுக்கும் வகையில் ஜேர்மனி மற்றும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (அ-ஐ-7)

## சகலரும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பயங்கரவாதத்தையும், வன்முறைகளையும் வெல்வதற்கும், எங்கள் நாட்டுக்கும் தேசத்துக்கும் நல்ல எதிர்காலத்தைத் தேடும் முயற்சியில் சகிப்புத் தன்மையைப் பேணுவதற்கும் எம்மை நாமே மீள அர்ப்பணித்துக் கொள்வது அவசியமானது.

இந்தப் புதுவருடம் எமக்குப் புதிய சவால்களைத் தந்து நிற்கின்றது; அதேசமயம் பல புதிய சந்தர்ப்பங்களுக்கான வழியையும் அது திறந்து விடும்.

அமைதியான, சுபீட்சமான புதுவருடம் உங்களுக்குக் கிட்ட எனது வாழ்த்துகளைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறேன்.'' (உ)

## வடக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிரந்தர இணைப்புக்கு ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவு வழங்காது.

8 அல்லது 10 வருடங்களின் பின்னர் நாட்டில் கருத்துக் கணிப்புகள் நடத்தப்பட்டே இணைப்பு நிரந்தரமாக்கப்படும் என்று ஐக்கிய தேசியக் கட்சி மேலும் தெரிவித்துள்ளது.

அனைத்துக் கட்சிக் குழுவின் நிபுணர்கள் கடந்த வியாழக்கிழமை கூடினர். அரசியல் கட்சிகள் தமது கருத்துகளை முன்வைக்கும் வரை மேலதிகக் கூட்டங்களை நடத்துவதில்லை என்று அவர்கள் தீர்மானித்துள்ளனர்.

கடந்த டிசம்பர் 6 ஆம் திகதி பெரும்பான்மை மற்றும் சிறுபான்மைக் கட்சிகள் சமர்ப்பித்த அறிக்கைகளின் பின்னர் அனைத்துக் கட்சிக் குழு நிபுணர்கள் கலந்துரையாடவில்லை. எதிர்வரும் 8 ஆம் திகதி அனைத்துக் கட்சிக் கூட்டம் நடைபெறவுள்ளது. (ஐ)

## சதாமின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடத்திலேயே தந்தையின் உடலும் நேற்று அடக்கம் செய்யப்பட்டது.

சதாம் ஹுசைனுக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்ட சில மணிநேரத்தின் பிறகு அவரது உடல் அமெரிக்க விமானம் ஒன்றில் திக்றிற் பிராந்தியத்திற்கு எடுத்து வரப்பட்டு சவ அடக்கம் செய்யும் பணியாளர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

பாக்தாத்தின் வடக்கேயுள்ள நகரின் மையத்தில் சதாமின் உடல் புதைக்கப்பட்டது.

எந்தவித மரியாதைகளோ, சம்பிரதாய பூர்வ சடங்குகளோ இன்றி உடல் அடக்கம் செய்யப்பட்டது என்று திக்ரித்திலுள்ள அவரது உறவினர்கள் கூறியிருக்கின்றனர். (ஐ)


ஐடியல் அக்கடமி

சிரணிச் சந்தி, சண்டிலிப்பாய். | இடைப்பிட்டி காரைநகர். | நீராவியடி யாழ்ப்பாணம்.

A\L 2009

கலை, வர்த்தக, விஞ்ஞான, கணிதப் பிரிவுகள் ஆரம்பம்

மூன்று இடங்களிலும் ஒரே நாளில் ஒரே நேரத்தில் 01.01.2007 காலை 8.30

நிர்வாகியும் கணித ஆசானும் V.N.பத்மநாதன்

கிராம உத்தியோகத்தர் போட்டிப் பரீட்சை - 2006

வழிகாட்டி நூல் P.உமாசங்கர்

★ மொழித்திறன்
★ பொது அறிவும், நுண்ணறிவும்

முற்றிலும் எதிர்பார்க்கை விடயங்களுடன் கடந்த கால வினாத்தாள்கள் விடைகளுடன்

எமது வாடிக்கையாளர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்.

பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். 6693

SKY COMPUTERS (PVT) LTD.
No. 89, Kandy Road, Chundikuli, Jaffna.
Tel: 021 - 4590325 : Fax: 021 - 4590325
Affiliated with Irish International University (U.K)

விடுமுறைகாலப் பயிற்சி நெறிகள்

| | |
|---|---|
| MS Office | 1 Month |
| Desk Top Publishing | 1 Month |
| Computerized Accounting | 1 Month |
| Hardware Technology | 1 Month |

KIDS Program சிறுவர்களுக்கான பயிற்சி நெறி

Internet & E-mail 2weeks. Only 1000/=

அனைத்துப் பாடத்திட்டத்திற்குமான புதிய பிரிவுகள் ஆரம்பமாகவுள்ளன உடன் விரையுங்கள்

தனிப்பட்ட அனுமதிகளும் வழங்கப்படும்

E - mail : skycomputers_2@yahoo.com
(ச்சேர்டிபிக்கட் வழங்கப்படும்)
Today you learn Tomorrow you lead

விற்பனையில்

கிராம உத்தியோகத்தர்

போட்டிப் பரீட்சை வழிகாட்டி

தொகுப்பு: த.தவசேகர்

* பொது உளச்சார்பு * பொது அறிவு
* மொழியறிவு விடயங்களை உள்ளடக்கியது

NEW PHYSICS CENTRE

இல. 120 அரசடி வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ்.இந்து மகளிர் கல்லூரி முன்பாக)

A\L 2009
ஆரம்பம் 02.01.2007
செவ்வாய் 5 p.m.

By K.S.SASIKARAN B.Sc. (with Edu)

பிரத்தியேக வகுப்பு

Science & Technology

O/L 10, 9
ஆரம்பம் 03.01.2007 புதன் 9 a.m.

17, பிரவுண் லேன், கந்தர்மடம்.
(பிள்ளையார் அருகில்)
077 6660632

NEW SCIENCE CENTRE

யாழ்நகர்

A/L 2009
ஆரம்பம் : 06.01.2007
சனி 10 a.m.

| | |
|---|---|
| CHE. - அன்பழகன் | Maths - லக்ஸ்மன் |
| PHY. - விஜயகுமாரன் | சிவகரன் |
| K.செல்வன் | Bio. - அல்போன்ஸ் |

Propritor - Poobalasingum.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 01.01.2007 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.